## துடிப்போடு பணியாற்றக் கூடிய இளைஞரை வேட்பாளராக நிறுத்தியிருக்கிறோம்!

# வில்லிவாக்கத்தில் - தம்பி கார்த்திக் மோகனை வெற்றி பெறச் செய்யுங்கள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரம்!

**சென்னை, ஏப். 22-**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.04.2026) சென்னை - வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் கார்த்திக் மோகனை ஆதரித்து, ஆற்றிய உரை வருமாறு:-**

தமிழ்நாடு மீதும், தமிழ் மக்கள் மீதும் கடந்த ஒரு மாத காலமாக நான் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, அங்குள்ள வாக்காளர்களை சந்தித்த போது, "வரும் சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் நம்முடைய திராவிட மாடல் 2.0 ஆட்சி உருவாகப் போகிறது. அதற்கு நாங்கள் ஆதரவு தரப் போகிறோம்" என்ற உறுதியை தந்திருக்கிறார்கள்.



அந்த உறுதியை பெற்றுக் கொண்டு, நான் நேற்றைக்கு முன்தினம் சென்னை திரும்பினேன். நேற்று முன்தினமும், நேற்றும் சென்னையில் உள்ள பல்வேறு தொகுதிகளுக்குச் சென்று, இதே போன்ற பிரச்சாரப் பயணத்தை நான் தொடர்ந்து நடத்தினேன்.

அதைத் தொடர்ந்து, இன்றைய நிறைவு நாள் பிரச்சாரத்தை மாலை ஆறு மணிக்குள் முடிக்க வேண்டும் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

கொளத்தூர் தொகுதியில்தான் நான் வேட்பாளராக நிற்கிறேன். அதுவும் உங்களுக்குத் தெரியும். எதற்காக சொல்கிறேன் என்றால், வேட்பு மனு தாக்கல் செய்துவிட்டு சென்றவன்தான். இன்னும் தொகுதியைகூட சென்று பார்க்கவில்லை. இங்கு முடித்துவிட்டு, இறுதியாக அங்குதான் செல்கிறேன். அங்கு சரியாக ஒரு மணி நேரம்தான்.

என்ன நம்பிக்கை என்றால், "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தான் பிள்ளை தானே வளரும்" என்று சொல்வார்கள் அல்லவா? அந்த உணர்வோடுதான் நான் இருக்கிறேன்.

நிறைவு பிரச்சாரப் பொதுக்கூட்டம் கொளத்தூரில் நடைபெறுகிறது. அதனால் நீண்ட நேரம் இங்கு பேச வாய்ப்பில்லை என்றாலும், சுருக்கமாக நான் உங்களை எல்லாம் கேட்டுக்கொள்ள விரும்புவது, தமிழ்நாட்டில் என்னுடைய தலைமையில் திராவிட மாடல் ஆட்சி உருவானதற்குப் பிறகு, தேர்தல் நேரத்தில் சொன்ன உறுதிமொழிகள் எல்லாம் எப்படி காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஏறக்குறைய 90 சதவீதத்திற்கும் மேலான வாக்குறுதிகளை நிறைவேற்றித் தந்திருக்கிறோம். மீதம் இருக்கும் உறுதிமொழிகள், ஒன்றிய அரசின் தடையால் - இடையூறுகளால் - நிதி தராத காரணத்தினால் - முறையான அனுமதி வழங்காத காரணத்தினால், அந்தப் பணிகள் தடைப்பட்டிருக்கின்றன.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று வாக்களித்தோம். அது முடியவே முடியாது என்று அனைவரும் சொன்னார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன், நிதி பற்றாக்குறையை சரிசெய்து, அந்த உரிமைத்தொகையை வழங்கத் தொடங்கினோம். அப்போது கொரோனா நோய்த்தொற்றும் கொடுமையான காலக்கட்டத்தில் இருந்தது. அந்த உரிமைத் தொகையையும் திராவிட மாடல் 2.0 ஆட்சி வந்ததற்கு பிறகு, 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப் போகிறோம்.

கல்லூரி செல்லும் மாணவ-மாணவிகளுக்கு புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்களின் கீழ் மாதாமாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகிறோம்.

அதேபோன்று, காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.



இப்போது நம்முடைய தேர்தல் அறிக்கையில், நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு 'இல்லத்தரசி' திட்டத்தின்கீழ் 8 ஆயிரம் ரூபாய்க்கு கூப்பன் வழங்கப் போகிறோம். பெண்கள் தங்களுக்கு விருப்பமான பொருளை வாங்கிக் கொள்ளலாம்.

பெண்களுடைய முன்னேற்றத்திற்காக இந்த ஆட்சி என்னென்ன செய்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். உங்கள் முன்னேற்றம்தான், நாட்டின் முன்னேற்றம் என்ற அடிப்படையில்தான், அந்தப் பணிகளை எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம்.

கடந்த முறை தேர்தல் நடந்த போது என்ன சொன்னார்கள் என்றால், "ஸ்டாலினுக்கு கட்டம் சரியில்லை. அதனால் முதலமைச்சராக முடியாது" என்றார்கள். அந்தக் கட்டத்தை உடைத்து, முதலமைச்சராகி விட்டேன். இப்போது என்ன சொல்கிறார்கள் என்றால், "தொடர்ந்து தி.மு.க. 2 முறை ஆட்சிக்கு வந்தது இல்லையாம்". இந்த முறை, அதையும் உடைத்து இரண்டாவது முறையாக, உங்களுடைய அன்போடு, உங்கள் வீட்டுப் பிள்ளையாக இந்த ஸ்டாலின் ஆட்சிக்கு வரத்தான் போகிறான்.

அது ஏதோ பதவிக்காக வருகிறோம் என்று நினைக்காதீர்கள். ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் காப்பாற்ற வேண்டும் என்பதால்தானே தவிர, வேறு அல்ல.

பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏழாவது முறையாக மலரவும், நான் இரண்டாவது முறையாக பொறுப்பேற்பதற்கு நல்வாய்ப்பையும் தேடித் தாருங்கள் என்று உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய கார்த்திக் மோகன், ஒரு நல்ல இளைஞர். துடிப்பானவர். எப்போதும் சிரித்துக் கொண்டே இருப்பார். அந்த சிரித்த முகத்தோடு, உங்களுடைய குறைகளை எல்லாம் கேட்டு, உங்களையும் சிரிக்க வைப்பார். உங்கள் குடும்பத்திலும் மகிழ்ச்சியை வர வைப்பார். என்ன பிரச்சினை என்றாலும், துடிப்போடு உங்களுக்காகப் பணியாற்றக் கூடிய ஒரு சிறந்த இளைஞரைத்தான் தேர்ந்தெடுத்து, இன்றைக்கு வேட்பாளராக நிறுத்தியிருக்கிறோம். அவரை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வையுங்கள் என்று உங்களை எல்லாம் அன்போடு கேட்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### துறைமுகம் தொகுதி கழக வேட்பாளர்

## பி.கே.சேகர்பாபுவுக்கு - மு.க.தமிழரசு வாக்கு சேகரித்தார்!



*சென்னை, ஏப்.22-*

*துறைமுகம் தொகுதி கழக வேட்பாளர் பி.கே. சேகர்பாபுவை ஆதரித்து மு.க.தமிழரசு அவர்கள் வாக்கு சேகரித்தார்.*

*இந்த வாக்கு சேகரிப்பில் பி.கே.சேகர்பாபு அவர்கள் பேசும்போது.. கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் உங்களின் பேராதரவால் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய அமைச்சரவையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத் தலைவராக பொறுப்பேற்று செவ்வண பணிகளை மேற்கொண்டுள்ளோம்..*

*குறிப்பாக இந்து சமய அறநிலைத்துறை அமைச்சராக இந்த ஐந்து ஆண்டுகளில் 20 ஆண்டுகள் முதல் 400 ஆண்டுகள் வரை குடமுழுக்கு நடைபெறாத பழமையான 4500 திருக்கோயில்களுக்கு மேற்பட்ட கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தி உள்ளோம். கோவில்களின் சொத்துக்கள் கிட்டத்தட்ட 8000 கோடிக்கு மேல் ஆக்கிரமக்காரார்களிடமிருந்து மீட்டெடுத்துள்ளோம்.. அனைத்து சாதியினரும் அர்ச்சகர் சட்டத்தை நடைமுறைப்படுத்தி 29 பேர் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*திருக்கோயில்கள் சார்பில் 4 கிராம் தங்கத் தாலி, பட்டு புடவை, பட்டு வேட்டி உட்பட 70000 மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் அளித்து இதுவரை 2800 ஜோடிகளுக்கு திருமணம் நடத்தப்பட்டுள்ளது. 19 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம், 770 கோயில்களில் ஒருவேளை அன்னதான திட்டம் நடைமுறைப்படுத்தியுள்ளோம், அன்னைத் தமிழில் அர்ச்சனை என எல்லோரும் போற்றும் வகையில் பணிகளை மேற்கொண்டுள்ளோம்.*

*சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத் தலைவராக வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சுமார் 8000 கோடிக்கு மேல் வடசென்னையின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.*

*தொடர்ந்து 2026 ல் துறைமுகம் தொகுதியில்*

*சீரான போக்குவரத்து, நடைமேடைகள், தெருவோரக்கடைகள், நவீன கழிப்பிடங்கள் அமைக்கவும்.. ஒவ்வொரு வட்டத்திலும் விளையாட்டு பயிற்சி வளாகங்கள், விளையாட்டு மையங்கள், பூங்காக்கள், மக்கள் தேவை தீர்ப்பதற்காக மாதந்தோறும் குறை தீர்க்கும் முகாம்கள் நடத்திடவும் தயாளுஅம்மாள் பயிற்சி பள்ளியை மேலும் விரிவுபடுத்தி AI, அழகுக் கலை,தையல் பயிற்சி, மற்றும் கணினி பயிற்சிகள் அளித்திடவும், சுகாதார மையங்களில் இலவச முகாம்கள் நடத்திடவும்,24 மணி நேரமும் குடிநீர் கிடைத்திடவும், கழிவு நீர் அகற்றும் பணிகள் மேற்கொள்ளவும், தடையில்லா மின்சாரம் கிடைப்பதற்காக 33/11 KV திறன் கொண்ட மின் நிலையங்கள் அமைத்திடவும் சாலையோர வாழ் மக்களுக்கு மேலும் பல ஆயிரம் வீடுகள் கட்டி கொடுப்பதற்காகவும், துறைமுகம் தொகுதியில் மேலும் இரண்டு முதல்வர் திருமண மண்டபங்கள் கட்டுவதற்காகவும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வேட்பாளராக மதசார்பற்ற கூட்டணி கட்சிகளின் வேட்பாளராக துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடுகின்ற பி.கே.சேகர் பாபு ஆகிய எனக்கு உதயசூரியன் சின்னத்திலே வாக்களித்து இந்த பணிகள் எல்லாம் தொடர மீண்டும் வாய்ப்பளிக்க வேண்டி விரும்பி வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.*

*இந்த வாக்கு சேகரிப்பில் பகுதிக் கழகச் செயலாளர்கள், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி,இரா. நரேந்திரன்,இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம். விஜயகுமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி,வெ.பரிமளம் P. விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல். சத்யநாராயணன், எஸ் புகழேந்தி ,ஆர் ஏ அஸ்லாம், டீ கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார், கே கவியரசு ஆ.நா. பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா. பிரபாகரன், லண்டன் க. முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.*

---

### தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு

## அகில இந்திய மலையாளி சங்கங்களின் கூட்டமைப்பு ஆதரவு!

### சங்கத் தலைவர் யூ. பிரேமன் முதல்வருக்கு கடிதம்!

சென்னை, ஏப்.22-

சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு அகில இந்திய மலையாளி சங்கங்களின் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.

நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, அகில இந்திய மலையாளி சங்கங்களின் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.

அகில இந்திய மலையாளி சங்கங்களின் கூட்டமைப்பின் அகில இந்திய தலைவர் யூ.பிரேமன் அவர்கள் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், "தங்கள் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் பொதுத் தேர்தலில் நிபந்தனையற்ற முழு ஆதரவு அளிக்கிறோம்" என உறுதி அளித்துள்ளார்.

---



2026 சட்டமன்றத் தேர்தலில் திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழகத் தலைவர் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் கழக வேட்பாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆவடி பருத்திப்பட்டு மேம்பாலம் முதல் ஆவடி மாநகராட்சி அலுவலகம் வரை திறந்த வெளி வாகன பிரச்சாரத்தில் நேற்று 21.04.2026 உதயசூரியன் சின்னத்திற்கு திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்துக் கூறி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்ந்த நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு பிரச்சாரம் மேற்கொண்டனர்.